## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1994 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, காலி பாரம்பரிய மன்றச் சட்டம்

---

*(1994, ஏப்ரில் மாதம் 26 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

***அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது***

---

*1994, ஏப்ரில் மாதம் 29 ஆம் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டுள்ளது.*

***இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.***

---

கொழும்பு 7, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

*விலை : ரூபா 1.20* *தபாற் செலவு : ரூபா 1.00*

## 1994 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, காலி பாரம்பரிய மன்றச் சட்டம்.

[1994, ஏப்ரில் மாதம் 26 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 39/92

காலி பாரம்பரிய மன்றம் என அழைக்கப்படும் ஒரு மன்றத்தைத் தாபிப்பதற்கும் அதன் குறிக்கோள்களையும் தத்துவங்களையும் குறித்துரைப்பதற்கும், அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.**

1. இச்சட்டமானது, 1994 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, காலி பாரம்பரிய மன்றச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையொன்றின் மூலம் அமைச்சரால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய திகதியில் நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

### பாகம் I

### காலி பாரம்பரிய மன்றத்தைத் தாபித்தல்

**காலி பாரம்பரிய மன்றத்தைத் தாபித்தல்.**

2. (1) (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) "காலி பாரம்பரிய மன்றம்" என அழைக்கப்படவேண்டிய மன்றம் ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) மன்றமானது, (1) ஆம் உப்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரைக்கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன் இடையறாவழியுரிமையும் பொது இலச்சினையொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் அத்தகைய பெயர்கொண்டு அது வழக்குத் தொடரலாம் என்பதுடன் அதற்கு எதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம்.

**மன்றத்தின் குறிக்கோள்கள்.**

3. மன்றத்தின் குறிக்கோள்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:—

(அ) வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த நகர நடுநிலையமொன்றாகவும் தொல்பொருளியல் நலம்சார்ந்த இடப்பரப்பொன்றாகவும், காலிக் கோட்டையையும் அதனுடன் சேர்த்து அதன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கடல்சார் மேட்டு நிலத்தையும், பாதுகாத்தலையும் பேணிக்காத்தலையும், அபிவிருத்தியையும் மேம்படுத்துதல் ;

(ஆ) எழுத்திலுள்ள சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, காலிக் கோட்டையினுள்ளும் வரலாற்று, பண்பாட்டு அல்லது அழகியல் பெறுமதிவாய்ந்த அதன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, கடல்சார் மேட்டு நிலத்தினுள்ளும், ஏதேனும் அசைவற்ற அத்துடன் அசைவுள்ள ஆதனத்தைக் கொள்ளுதல், வைத்திருத்தல், பேணுதல், அத்துடன் கையுதிர்த்தல் ;

(இ) சொல்லப்பட்ட கோட்டையினுள்ளும் அதன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கடல்சார் மேட்டு நிலத்தினுள்ளும் இருக்கும் வீடுகள், கட்டடங்கள், வேறு ஆதனம் என்பனவற்றைப் பாதுகாத்தல், காலிக்கோட்டையில் வதிபவர்களிடையே, அக்கறையை மேம்படுத்துதல், அத்துடன் சொல்லப்பட்ட கோட்

டையினையும் அதன் வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த கடல்சார் மேட்டு நிலத்தையும் பேணிப்பாதுகாத்தல், பாதுகாத்தல் என்பன பற்றியும் சொல்லப்பட்ட கோட்டையினதும் அதன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கடல்சார் மேட்டு நிலத்தினதும் வரலாற்று, பண்பாட்டு, தொல்பொருளியல், அழகியல் அம்சங்கள் பற்றியும், அத்தகைய வதிபவர்களுக்கு அறிவு புகட்டுதல், அத்துடன் சொல்லப்பட்ட கோட்டையிலும் அதன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கடல்சார் மேட்டு நிலத்திலுள்ள வீடுகளையும், கட்டடங்களையும் மீளக் கட்டுதல், மறுசீரமைத்தல், பேணிப் பாதுகாத்தல், தரம் உயர்த்துதல், புனர்நிர்மாணித்தல், அத்துடன் அவற்றிற்குப் புதிய பயன்பாடுகளைக் காணுதல் ;

(ஈ) காலிக்கோட்டையையும் அதன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கடல்சார் மேட்டுநிலத்தையும் கண்டு மகிழ்வதற்கான அணுகுவழியையும் வசதியையும் ஏற்படுத்திக் கொடுத்தல் ;

(உ) காலிக் கோட்டையிலும் அதன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மேட்டு நிலத்திலும் வதிபவர்களின் பொதுநலனை ஊக்குவித்தல் ; அத்துடன்

(ஊ) மேற்கூறிய குறிக்கோள்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றில் எதனையும் நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லாச் செயல்களை அல்லது காரியங்களைச் செய்தல்.

மன்றத்தின் தத்துவங்கள்.

4. தாபனமானது, 18 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமையப் பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) இச்சட்டத்தின்கீழ் அல்லது ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, மரணசாதனம், கையுதிர்த்தல்மூலம் அல்லது வேறு வகையில் அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதலும் வைத்திருத்தலும் அத்துடன் அத்தகைய ஆதனத்துடன் சேர்ந்துள்ள ஏதேனும் நம்பிக்கைப் பொறுப்புக்களுக்கமைய அதை விற்றல், ஈடுவைத்தல், குத்தகைக்கு விடுதல், கொடுத்துமாற்றுதல் அல்லது வேறுவகையாகக் கையுதிர்த்தல் ;

(ஆ) மன்றத்திற்குச் சொந்தமான ஏதேனும் காணியில், ஏதேனும் கட்டடத்தை, அமைப்பைக் கட்டுதல், கட்டச் செய்வித்தல் அத்துடன் மன்றத்திற்கு உரித்தாக்கப்பட்ட அல்லது அதனால் வைத்திருக்கப்பட்ட ஏதேனும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பண்பாட்டு அல்லது தொல்பொருளியல் சார்ந்த கட்டடத்தை அல்லது அமைப்பை அல்லது நினைவுச்சின்னத்தை அத்தகைய ஆதனத்தைச் சேர்ந்த நம்பிக்கைப்பொறுப்புமூலம் அல்லது வேறுவகையில், ஏதேனும் கட்டுப்பாட்டிற்கமைய, முகாமை செய்தல், பேணுதல், பழுதுபார்த்தல், மறுசீரமைத்தல் அத்துடன் பேணிப்பாதுகாத்தல் ;

(இ) அரசாங்கத்திற்காக அல்லது ஏதேனும் தனியாளுக்காக அல்லது கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவிற்காக, காலிக்கோட்டையிலும் அதன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கடல்சார் மேட்டு நிலத்திலுமுள்ள ஏதேனும் ஆதனம் தொடர்பில் நம்பிக்கைப் பொறுப்பாளராகச் செயலாற்றுதல்;

(ஈ) அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அல்லது அதன் கடமைகளைப் புரிவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் செய்துகொள்ளுதல் அத்துடன் புரிதல் ;

(உ) உள்ளூர் அல்லது வெளிநாட்டு மூலவளங்களிலிருந்து காசாகவாயினுஞ்சரி அல்லது பொருளாகவாயினுஞ்சரி கொடைகள், மானியக்கொடைகள் அல்லது நன்கொடைகள் என்பவற்றை ஏற்றுக்கொள்ளுதல் அல்லது சேகரித்தல் ;

(ஊ) காலிக்கோட்டையினதும் அதன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கடல்சார் மேட்டு நிலத்தினதும் வரலாறு பற்றி ஆராய்ச்சியைப் பொறுப்பேற்று அதற்கு நிதியுதவியளித்தலும் அத்தகைய ஆராய்ச்சியின் முடிவை வெளியிடுதலும் ;

(எ) தொல்பொருளியல் திணைக்களத்தின், நகர அபிவிருத்தி அதிகாரசபையின், காலி மாநகர சபையின், கரையோரம் பேணிப் பாதுகாத்தல் திணைக்களத்தின், இலங்கைச் சுற்றுலா சபையின் பணித்தல்களுக்கமைய, காலிக்கோட்டையிலும் அதன் வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த கடல்சார் மேட்டு நிலத்திலுள்ளும் உள்ள பகிரங்க வாழ் வசதிகளைப் பேணுதல், திருத்துதல், பழுதுபார்த்தல், அத்துடன் அபிவிருத்தி செய்தல் ;

(ஏ) மாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப்பத்திரங்கள் வேறு கைமாற்றத்தகு சாதனங்களை ஆக்குதல், எடுத்தல், ஏற்றுக் கொள்ளுதல், புறக்குறிப்பிடுதல், பேச்சுவார்த்தையிலீடுபடுதல் என்பதுடன் ஏதேனும் வங்கியில் அல்லது எவையேனும் வங்கிகளில் நடைமுறை சேமிப்பு அத்துடன் வைப்புக் கணக்குகளை ஆரம்பித்தலும் பேணுதலும் ;

(ஐ) மன்றங்களின் குறிக்கோள்களை மேலெடுத்துச் செல்லல், கல்வி நிறுவனங்களை, நூதனசாலைகளை, ஆய்வுகூடங்களை, ஆராய்ச்சி நிலையங்களை, வானிலை அவதான நிலையங்களை, வதிவிட வசதியை அளிக்கும் இடங்களைத் தாபித்தலும் பேணுதலும் வேலைத்தளங்களைக் கொண்டுநடாத்துதலும் ;

(ஒ) அதன் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்துக்கு அவசியமான பணத்தைப் பிணையுடனோ அல்லது பிணையின்றியோ பெறுதல் ; அத்துடன்

(ஓ) பிரயோகிக்கப்படாத ஏதேனும் வருமானம் உள்ளடங்கலாக மன்றத்திற்குச் சொந்தமான எவையேனும் பணங்களை, (87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புகள் கட்டளைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவில் அல்லது ஏதேனும் வேறு எழுத்திலான

சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் எந்தப் பிணையங்களில் நம்பிக்கைப் பொறுப்புப் பணங்களை முதலிடு செய்தல் சட்டமுறையானதோ அந்த ஏதேனும் பிணையங்களில் முதலீடு செய்தல் அல்லது இலங்கையில் அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்வதில் அத்தகைய ஏதேனும் பணத்தை முதலிடு செய்தல் அல்லது அத்தகைய முதலீடுகளை வேறுபடுத்துதல் அல்லது உடனடியான செலவிற்குத் தேவைப்படாத அத்தகைய பணத்தின் ஏதேனும் பகுதியை ஏதேனும் வங்கியில் நிலையான வைப்பிலிடுதல்.

மன்றத்தின் அலுவல்களின் திருவாகம் முகாமைச் சபையின் மீது உரித்தாக்கப் படுதல்.

5. (1) மன்றத்தின் அலுவல்களின் நிருவாகம், முகாமை அத்துடன் கட்டுப்பாடு (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பிடு செய்யப் படும்) மன்றத்தின் முகாமைச் சபைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) சபையானது, மன்றத்தின் அலுவல்களை நிருவகிக்கும் நோக்கங்களுக்காக, இச்சட்டத்தினால் மன்றத்துக்கு அளிக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட, வைக்கப்பட்ட தத்துவங்களை, பணிகளை, அத்துடன் கடமைகளைப் பிரயோகித்தல்.

(3) சபையானது, அதன் கூட்டங்கள் தொடர்பான நடவடிக்கை முறை தொடர்பான விதிகளை ஆக்குவதற்குத் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

சபையின் அமைப்பு.

6. (1) சபை கீழ்க்கண்ட ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) பதவிவழி உறுப்பினர்களான,

(i) தொல்பொருளியல் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர் ;

(ii) நகர அபிவிருத்தி அதிகாரசபை அல்லது அவரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர் ;

(iii) தென் மாகாண அமைச்சர்களின் சபையின், எந்த அமைச்சரிடம் கலாச்சார அலுவல்கள் என்னும் விடயம் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சர் அல்லது அவரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர் ;

(iv) காலிக் கோட்டையும் அதன் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கடல் சார்ந்த பேட்டுநிலப் பகுதியும் அமைந்துள்ளதான பெரும்பாகச் செயலாளர் பிரிவுக்கென நியமிக்கப்பட்ட பெரும்பாகச் செயலாளர் ;

(v) காலி மாநகரசபையின் மாநகர முதல்வர் அல்லது அவரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர் ;

(vi) தொல் பொருளியல் பட்டப் பின் படிப்பு நிறுவனப் பணிப்பாளர் அல்லது அவரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர் ;

(vii) நெதர்லாந்து பழைய மாணவர் சங்கத் தலைவர் அல்லது அவரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர் ;

(viii) இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் தவிசாளர் அல்லது அவரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர் ;

(ix) மத்திய கலாச்சார நிதியத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர்;

(x) தேசிய நீர் வள மூலவளங்கள் முகவராண்மையின் தவிசாளர் அல்லது அவரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர்;

(xi) தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் அல்லது அவரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர்;

(xii) கரையோரம் பேணல் திணைக்களப் பணிப்பாளர் அல்லது அவரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர்;

(xiii) மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் கட்டிடக்கலை, நினைவுச் சின்னம் பேணல் அத்துடன் அமைவிடங்கள் பணிப்பாளர் அல்லது அவரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர்; அத்துடன்

(xiv) காலி மாவட்ட, மாவட்டச் செயலாளர்.

(ஆ) வேறு உறுப்பினர்கள், குறிப்பாக —

(i) அமைச்சரினால் நியமிக்கப்பட்ட (இதனகத்துப் பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) ஆறு ஆட்கள்; அத்துடன்

(ii) பதவி வழிவந்த உறுப்பினர்களால் ஆண்டுதோறும் தெரிவு செய்யப்படும் (இதனகத்துப் பின்னர் "தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) ஆறு ஆட்கள்.

(2) (அ) சபையின் உறுப்பினர்கள் தம்மிடையேயிருந்து முறையே சபையின் தவிசாளராகவும் உப தவிசாளராகவும் இருக்க வேண்டிய இரு உறுப்பினர்களைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

(ஆ) தவிசாளரானவர் உப தவிசாளருக்கு அதன் சார்பில் முகவரியிட்டனுப்பும் கடிதமூலம் தவிசாளர் பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன் உப தவிசாளரானவர் தவிசாளருக்கு அதன் சார்பில் முகவரியிட்டனுப்பும் கடிதமூலம் உப தவிசாளர் பதவியிலிருந்து விலகலாம்.

(இ) சபையானது தீர்மானத்தின் மூலம் தவிசாளரை அல்லது உப தவிசாளரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(ஈ) தவிசாளர் அல்லது உப தவிசாளர் சுகயீனம் காரணமாக அல்லது வேறு இயலாமை காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக தமது பதவியின் கடமைகளைத் தற்காலிகமாகப் புரிய இயலாதவராகவிருந்தால் சபையின் உறுப்பினர்கள் அவரின் இடத்திற்கு சபையின் வேறொரு உறுப்பினரைத் தெரிவுசெய்யலாம்.

(உ) பந்திகள் (ஆ) அத்துடன் (இ) என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைய, தவிசாளரின் பதவிக்காலமானது, சபையில் அவரது உறுப்பாண்மைக் காலப்பகுதியாக இருத்தல் வேண்டும் என்பதுடன் உப தவிசாளரின் பதவிக்காலமானது சபையில் அவரது உறுப்பாண்மைக் காலப்பகுதியாக வருத்தலும் வேண்டும்.

(3) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும் —

(அ) அவர் அமைச்சரினால் பதவியில் இருந்து அகற்றப்பட்டால்; அல்லது

(ஆ) அவர் அமைச்சருக்கு முகவரியிட்ட கடித மூலம் தமது பதவியிலிருந்து விலகினால்,

அத்தகைய உறுப்பினராக இருப்பதிலிருந்து பதவியை வறிதாக்க வேண்டும்.

(4) சபையின் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும் —

(அ) அவர் சபையினால் பதவியிலிருந்து அகற்றப்படலாம்; அல்லது

(ஆ) அவர் சபைக்கு முகவரியிட்ட கடித மூலம் தமது பதவியிலிருந்து விலகினால்,

அத்தகைய உறுப்பினராக இருப்பதிலிருந்து பதவியை வறிதாக்குதல் வேண்டும்.

(5) சபையின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் இறக்குமிடத்து, அல்லது பதவியிலிருந்து விலகுமிடத்து, அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுமிடத்து, அமைச்சர், இறந்த, பதவி விலகிய அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்ட உறுப்பினரின் இடத்தில உறுப்பினரொருவராக வேறொரு ஆளை நியமிக்கலாம்.

(6) சபையின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர், சுகவீனம் காரணமாக அல்லது வேறு இயலாமையினால் அல்லது இலங்கையில் இல்லாமையினால் தற்காலிகமாக அவரது பதவியின் கடமைகளைப் புரிய இயலாதவராயிருக்குமிடத்து, அமைச்சர் அவரது இடத்தில் செயலாற்றுவதற்கு வேறொரு ஆளை நியமிக்கலாம்.

(7) உட்பிரிவு (5)ன் கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், இறப்பினால் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதனால் எலவே பதவியை வறிதாக்கினாலன்றி, அவர் எவ்வுறுப்பினரை அடுத்து வென்றாரோ அந்த உறுப்பினரின் பதவியின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு பதவி வகித்தல் வேண்டும்.

(8) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும் இறப்பினால், பதவி விலகலினால் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதனால் அவர் எலவே பதவியை வறிதாக்கினாலன்றி அத்தகைய பதவிக்கான அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்று வருட காலப்பகுதிக்கு பதவி வகித்தல் வேண்டும்.

(9) மூன்றும் உட்பிரிவின்கீழ் பதவியிலிருந்து அகற்றப்படுவதாலன்றி வேறு வகையில் அவரது பதவியை வறிதாக்குகின்ற சபையின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர், மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(10) சபையின் எவரேனும் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் இறக்குமிடத்து அல்லது பதவி விலகுமிடத்து அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுமிடத்து, சபையானது இறந்த, பதவி விலகிய அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்ட உறுப்பினரின் இடத்தில் உறுப்பினர் ஒருவராக இருப்பதற்கு வேறொரு ஆளைத் தெரிவுசெய்யலாம்.

(11) சபையின் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் எவரும் சுகயீனம் காரணமாக அல்லது வேறு இயலாமை காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக தமது பதவியின் கடமைகளைத் தற்காலிகமாகப் புரிய இயலாதவராக இருக்குமிடத்து, சபையானது அவரின் இடத்தில் செயலாற்றவென வேறொரு ஆளைத் தெரிவுசெய்யலாம்.

(12) பத்தாம் உட்பிரிவின்கீழ் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர், இறப்பின் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் அவர் ஏலவே விலகினால் அல்லது தமது பதவியை வறிதாக்கினாலன்றி, அவர் எவ்வுறுப்பினரை அடுத்துவருகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக் காலத்தின் முடிவுறுதெஞ்சியுள்ள பாகத்திற்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(13) சபையின் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும், இறப்பின் மூலம் பதவிவிலகலின் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் ஏலவே பதவியை வறிதாக்கினாலன்றி அத்தகைய பதவிக்கு அவர் தெரிவுசெய்யப்பட்ட தேதியிலிருந்து இரண்டு வருட காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன் (4) ஆம் உட்பிரிவின்கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலன்றி மீளத் தெரிவுசெய்யப்படுவதற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும்.

(14) சபையின் பதவி வழிவந்த உறுப்பினர் ஒவ்வொருவரும் எப்பதவியின் பயனாக அவர் சபையின் உறுப்பினர் ஒருவராகவிருக்கின்றாரோ அப்பதவியை அவர் வகிக்கின்றவரை, உறுப்பினராக பதவி வகித்தல் வேண்டும்.

(15) சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் சபையின் உறுப்பாண்மையில் ஏதேனும் வெற்றிடம் ஏற்பட்டதன் காரணத்தினால் அல்லது அதன் உறுப்பினர் எவரினதும் நியமனத்தில் ஏற்பட்ட ஏதேனும் குறைபாட்டின் காரணத்தினால் வலிதற்றதாதல் வேண்டுமெனக் கருதப்படுதலாகாது.

7. சபையானது மன்றத்தின் தவிசாளருக்கு அல்லது உப தவிசாளருக்கு அல்லது எவரேனும் அலுவலருக்கு, இப்பிரிவின் மூலம் சபைக்கு அளிக்கப்பட்ட தத்துவங்கள் தவிர்ந்த, இச்சட்டத்தினால் சபைக்கு அளிக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அத்துடன் நிறைவேற்றுவதற்கு கையளிக்கலாம். சபைத் தவிசாளரின் தத்துவங்கள் முதலியன.

**நிதியத்தின் பணியாட்டொகுதி.**

8. (1) இச்சட்டத்தினதும் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிகளினதும் ஏற்பாடுகளுக்கமைய மன்றமானது அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிப்பதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(2) மன்றத்தின் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் நியமனமானது ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்ட நியமனத்திற்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறைத் திட்டத்திற்கிணங்க மன்றத்தினால் செய்யப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்திற்கும், அமைச்சரால் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளுக்கும் அமைவாக, மன்றமானது கூலிகள், சம்பளம், அல்லது வேறு ஊதியம் என்பன உட்பட மன்றத்தின் அலுவலர்களதும் சேவையாளர்களதும் சேவையின் நியதிகளையும் நிபந்தனைகளையும் தீர்மானித்தல் வேண்டும்.

(4) மன்றத்தின் அலுவலர்களும் சேவையாளர்களும். மன்றத்தின் பதவி விலகுகைத் தத்துவம் உட்பட அதன் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

(5) மன்றமானது அதன் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் நன்மைக்காகச் சகாய நிதியங்களையும் செயற்றிட்டத்தையும் தாபிக்கலாம், அத்துடன் ஒழுங்குபடுத்தலாமென்பதுடன் அத்தகைய ஏதேனும் நிதியத்திற்கு அல்லது செயற்றிட்டத்துக்கு உதவுதொகைகளையும் அளிக்கலாம்.

**குறித்தசில ஒப்பந்தத்தின் நோக்கத்திற்காக மன்றத்திற்கான சேவையானது அரசாங்கத்திற்கான சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.**

9. குறித்தவொரு காலப்பகுதிக்கு அரசாங்கத்திற்குச் சேவை செய்வதாக உடன்பட்டு, அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டவரான ஆளெவரையும், மன்றம் தொழிலுக்கமர்த்தியுள்ளவிடத்து, அந்த ஆளினால் மன்றத்திற்கு ஆற்றப்படும் சேவைக்காலப்பகுதியானது அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அரசாங்கத்துக்கு ஆற்றும் சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

**மன்றத்தின் பணியாட்டொகுதிக்கு பகிரங்க அலுவலர்களை நியமித்தல்.**

10. (1) மன்றத்தின் வேண்டுகோளின்பேரில் அமைச்சரின் அமைச்சில் சேவையாற்றும் பகிரங்க சேவை அலுவலர் எவரும், பொது நிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் செயலாளரின் ஒப்பாட்டுடன், அமைச்சரின் அமைச்சிற்கான செயலாளரினதும் அலுவலரினதும் சம்மதத்துடன் மன்றத்தால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு மன்றத்தின் பணியாட்டொகுதிக்கு அதேபோன்ற சம்மதமுடன் தற்காலிகமாக நியமிக்கப்படலாம். அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) மன்றத்தின் வேண்டுகோளின்பேரில் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடுசெய்யப்பட்டவரான அலுவலரொருவர் தவிர்ந்த எவரேனும் பகிரங்க சேவை அலுவலர், அவ்வலுவலரின் சம்மதத்துடனும், பொதுநிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளரின் சம்மதத்துடனும் மன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடிய

வாறான அத்தகைய காலப்பகுதிக்கு, மன்றத்தின் பணியாட்டொகுதிக்கு அதேபோன்ற சம்மதத்துடன் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(3) மன்றத்தின் பணியாட்டொகுதிக்கு பகிரங்க சேவையில் உள்ள அலுவலரெவரும் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச்சபைச் சட்டத்தின் 13(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) மன்றத்தின் பணியாட்டொகுதிக்கு பகிரங்க சேவையில் உள்ள அலுவலரெவரும் நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச்சபைச் சட்டத்தின் 13(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

மன்றத்தின் இலச்சினை.

11. மன்றத்தின் இலச்சினையானது—

(அ) சபை காலத்திற்குக்காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆட்களின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்;

(ஆ) சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய விதத்தில் மாற்றப்படலாம்; அத்துடன்

(இ) சபையின் இரு உறுப்பினர்களின் சமூகத்தில் சபையின் அதிகாரத்துடனன்றி எத்தன்மைத்தான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவ் உறுப்பினர்கள் சமூகமளித்தமைக்கு அடையாளமாக தமது பெயர்களை அச்சாதனத்தில் ஒப்பமிடுதல் வேண்டும், அத்துடன் அவ்வாறு ஒப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியொருவராக ஒப்பமிடுவதிலிருந்து தனிவேறானதாதல் வேண்டும்.

## பாகம் II

### நிதி

மன்றத்தின் நிதியம்.

12. (1) மன்றமானது தனது சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பின்வருவன மன்றத்தின் நிதியத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்:—

(அ) மன்றமானது அதன் தத்துவங்கள், பணிகள், கடமைகள் என்பவற்றைப் பிரயோகிக்கையிலும், நிறைவேற்றுகையிலும், அத்துடன் புரிகையிலும், அதனால் பெற்றுக்கொள்ளப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(ஆ) கடன்கள், நன்கொடைகள், கொடைகள் அல்லது இலங்கையிலிருந்தாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயிருந்தாயினுஞ்சரி மானியக்கொடைகள் என்பனவாயிலாக மன்றத்தினால் பெற்றுக்கொள்ளப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(3) பின்வருவன மன்றத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்—

(அ) இச்சட்டத்தின்கீழ் மன்றத்தின் தத்துவங்கள், கடமைகள், அத்துடன் பணிகள் என்பனவற்றைப் பிரயோகிக்கையில், நிறைவேற்றுகையில் அத்துடன் புரிகையில் நிதித்தாபனத்தினால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்கு அவசியமாகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ், அத்தகைய நிதியத்திலிருந்து செலுத்தப்படுவதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

*மன்றத்தின் கணக்குகளின் கணக்காய்வு.*

13. (1) சபையானது மன்றத்தின் வருமானம், செலவினம், சொத்துக்கள் அத்துடன் பொறுப்புக்கள் மற்றும் எல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய செம்மையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) மன்றத்தின் கணக்குகள் சபையினால் நியமிக்கப்படும் தகைமை பெற்ற கணக்காளரால் அல்லது கணக்காளர்களால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(3) மன்றத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "தகைமை பெற்ற கணக்காளர்" என்பது அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் (8) ஆம் பந்தியில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டது.

## பாகம் III

### பொது

*மன்றம் தொடர்பில் அமைச்சரின் தத்துவங்கள்.*

14. (1) அமைச்சர், மன்றத்தின் தத்துவங்கள் பிரயோகிக்கப்படுதல் அத்துடன் கடமைகள் புரியப்படுதல் தொடர்பில், காலத்துக்குக்காலம் சபைக்கு எழுத்தில் அத்தகைய பொதுவான பணிப்புரைகளை வழங்கலாமென்பதுடன், சபை, அத்தகைய பணிப்புரைகளுக்குப் பயன்கொடுத்தலும் வேண்டும்.

(2) அமைச்சர், மன்றத்தின் எல்லாச் செயற்பாடுகளும் அல்லது அவற்றில் எவையும், அவர் குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய ஆளினால் அல்லது ஆட்களினால் புலனாய்வு செய்யப்பட்டு அதுபற்றி அறிக்கை செய்யப்படல் வேண்டுமெனக் காலத்துக்குக்காலம் கட்டளையிடலாம், அத்துடன், அத்தகைய கட்டளையிடப்பட்டதன்மேல், சபையானது, அத்தகைய கட்டளையை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா வசதிகளை அளித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய எல்லாத் தகவலைக் கொடுத்துதவுதலும் வேண்டும்.

*அரச காணி அல்லது கட்டிடம் மன்றத்துக்குக் கிடைக்கக் கூடியதாகச் செய்தல்.*

15. அரச காணி அல்லது கட்டிடம் எதுவும், அரச காணிகள் என்னும் விடயத்துக்கு அப்போதைக்குப் பொறுப்பாக இருக்கின்ற அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, மன்றத்தின் நோக்கம் எதற்காகவும், மன்றத்தின் பயன்பாட்டுக்குக் கிடைக்கக்கூடியதாகச் செய்யப்படலாம் அல்லது மன்றத்துக்குப் பாரதீனப்படுத்தப்படலாம்.

16. மன்றம், மன்றத்தின் ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த பின்னர் ஆறு மாத காலப்பகுதியொன்று காலாவதியாகுமுன்னர் அவ்வாண்டின்போதான மன்றத்தின் செயற்பாடுகள்பற்றிய முழு விவரத்தைக் கொடுக்கும் அறிக்கையொன்றை அமைச்சருக்கு அனுப்புதல் வேண்டும். அமைச்சர், அவ்வறிக்கையின் பிரதிகள் பாராளுமன்றத்தில் அட்டவணைப்படுத்தப்படச் செய்வித்தல் வேண்டும். மன்றம் அதன் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

17. மன்றம், இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும். மன்றம், இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

18. மன்றத்தின் எல்லா உறுப்பினர்களும், அலுவலர்களும் அத்துடன் சேவையாளர்களும், தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக் குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படல் வேண்டும். தாபனத்தின் உறுப்பினர்களும் ஊழியர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல்வேண்டும்.

19. (1) தொடர்ச்சி அல்லது வழக்குத் தொடுப்பு எதுவும்— இச்சட்டத்தின் கீழ் எடுக்கப்படும் செயலுக்கான பாதுகாப்பு.

(அ) இச்சட்டத்தின்கீழ் மன்றத்தினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட செயல் எதற்காகவும், அதற்கெதிராக ;

(ஆ) இச்சட்டத்தின் கீழ் அல்லது சபையின் பணிப்புரையின் மேல் சபையின் உறுப்பினர் எவரினாலும், தாபனத்தின் அலுவலர், சேவையாளர் அல்லது முகவர் எவரினாலும் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட செயல் எதற்காகவும் அவர்களில் எவருக்குமெதிராக,

இருத்தல் ஆகாது.

(2) இச்சட்டத்தின் கீழ் அல்லது சபையின் பணிப்புரையின் மீது மன்றத்தினால் அல்லது அத்தகைய ஆளினால் செய்யப்படும் ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின்முன் மன்றத்துக்கு எதிராக அல்லது அத்தகைய ஆளுக்கெதிராக கொண்டுவரப்படும் ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது வழக்குத் தொடுப்பில் மன்றத்தினால் அல்லது (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அத்தகைய ஆளினால் உறப்படும் செலவு எதுவும், அச்செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்ப்பளித்தால், மன்றத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

ஒழுங்கு விதிகள்.

20. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, அமைச்சர் பின்வரும் எல்லாக் கருமங்களுக்காகவும் அல்லது அவற்றில் எவையேனும் கருமங்களுக்காகவும் அத்துடன் அவ்வெல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றில் எவையேனும் கருமங்கள் தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :—

(அ) மன்றத்தின் பணியாட்டொகுதியினருக்கான ஊதியம் உட்பட சேவை நியதி, நிபந்தனைகள் ;

(ஆ) மன்றத்தின் பணியாட்டொகுதிக்கு ஆட்கள் சேர்க்கும் செயற்றிட்டம் அத்துடன் நியமனம் செய்வதற்கான நடவடிக்கைமுறை ;

(இ) மன்றத்தின் நிகழ்ச்சித் திட்டங்கள் அத்துடன் செயற்றிட்டங்கள், வருடாந்த வரவுசெலவுத் திட்டம், அறிக்கை மற்றும் கணக்குகள் அத்துடன் அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களும் செயற்றிட்டங்களும், வருடாந்த வரவுசெலவுத் திட்டம், அறிக்கை மற்றும் கணக்குகள் தயாரிக்கப்படும் முறை ; அத்துடன்

(ஈ) விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட அத்தகைய வேறு கருமங்கள் அல்லது எவ்வேறு கருமங்கள் தொடர்பில் இச்சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள் ஆக்கப்பட வேண்டுமென அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறதோ, அவ்வேறு கருமங்கள்.

(2) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அது, அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அது கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியாகக்கூடியவாறு விரைவாக, பாராளுமன்றத்துக்கு முன் அங்கீகாரத்துக்கெனக் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகாரமளிக்கப்படாத ஒழுங்குவிதியெதுவும், அதற்கு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால், அதன்கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி எதுவும் அவ்வாறு எத்தேதியன்று இல்லாதொழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுகின்றதோ, அத்தேதி பற்றிய அறிவிப்பு, கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

21. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

22. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி— பொருள் கோடல்.

"மத்திய கலாசார நிதியம்" என்பது, 1980 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க மத்திய கலாசார நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட மத்திய கலாசார நிதியம் எனப் பொருள்படும் ;

"இலங்கை உல்லாசப் பிரயாணச் சபை" என்பது, 1966 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இலங்கை உல்லாசப் பிரயாணச் சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை உல்லாசப் பிரயாணச் சபை எனப் பொருள்படும் ;

"தவிசாளர்" என்பது, சபையின் தவிசாளர் எனப் பொருள்படும் ;

"அமைச்சர்" என்பது, அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்ட எவ்வமைச்சருக்கு கலாசார அலுவல்கள் என்னும் விடயம் குறித்தொதுக்கப்பட்டிருக்கிறதோ, அவ்வமைச்சர் எனப் பொருள்படும் ;

"தேசிய நீர்வாழ் வள ஆராய்ச்சி, அபிவிருத்தி முகவர் நிலையம்" என்பது, 1981 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, தேசிய நீர்வாழ் வள ஆராய்ச்சி, அபிவிருத்தி முகவர் நிலையச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய நீர்வாழ் வள முகவர் நிலையம் எனப் பொருள்படும் ;

"இலங்கைத் துறைமுக அதிகார சபை" என்பது, 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுக அதிகாரசபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை துறைமுக அதிகார சபையெனப் பொருள்படும் ;

"நகர அபிவிருத்தி அதிகாரசபை" என்பது, 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நகர அதிகார சபையெனப் பொருள்படும் ;

"உப தவிசாளர்" என்பது, சபையின் துணைத் தவிசாளர் எனப் பொருள்படும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,387 ; (வெளிநாட்டு) ரூபா 1.849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், 255, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 7 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.